**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

நமக்கு வாக்களித்தவர் நம்பிக்கைக்கு உரியவர். எனவே நாம் எதிர்நோக்கியிருப்பதைப் பற்றித் தயக்கமின்றி அறிக்கையிடுவதில் நிலையாய் இருப்போமாக

(எபிரேயர்: 10:23)

எசாயா இறைவாக்கினரின் தூதுரையில் காணப்படும் ஊழியனின் பாடல்கள் இயேசு என்னும் நபரில் நிறைவேறுகிறது. அவரின் பொதுவாழ்வுப் பணியின் தொடக்கமாக இயேசுவின் திருமுழுக்கைப் பற்றி நற்செய்தி விவரிக்கின்றது. மக்களின் முன் இயேசு இறைமகன் என்று ஒப்புக்கொள்ளப்பட்டார். இந்த நிகழ்வுகளின் வழியாக நற்செய்தியை வாசிப்போருக்கு இயேசு தம் பணி வாழ்வில் என்னென்ன செய்வார் என்று அறிந்துகொள்ளும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. அவரின் வார்த்தைகளும் செயல்களும் அவர் யார் - அதாவது கடவுளின் மகன் என்று பிரதிபலிக்கின்றது. இயேசுவில் புதிய அத்தியாயம், கடவுளின் வல்லமையால் அவரின் திட்டம் தொடங்குகிறது, கடவுளின் விருப்பம் நிறைவேறுகிறது. திருத்தூதர் பணிகள் நூலில் இயேசுவின் பெயரை அறிக்கையிடும் பேதுருவின் மூலம் கடவுளின் வல்லமை வெளிப்படுவதையும், அதன்பின் கொர்னேலியுவும் அவரின் வீட்டாரும் திருமுழுக்குப் பெறுவதையும் நாம் காண்கிறோம்.

புதிய சவால்களும் தடைகளும் தொடர்ந்து எழத்தான் செய்யும். ஆனாலும் திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுக்கொண்ட தூதுரைப்பணி என்றுமே மாறாது. அதுதான், கடவுளின் வல்லமையோடு நம்மைச்சுற்றியுள்ள மக்களுக்கு நற்செய்தியைப் பறைசாற்றி, கிறிஸ்துவை அனைவருக்கும் அறியச்செய்வது. 'புதிய இயல்பு' வாழ்க்கை வாழும் இந்த வாழ்க்கை முறையிலும், தற்போதைய அரசியல், சமுதாய, மற்றும் பொருளாதாரச் சூழலிலும் தொடர்ந்து தூதுரைப்பணியில் விடாமுயற்சியோடு தொடர்ந்து ஈடுபடுவது அவசியம். எதிர்காலத்தைப் பற்றி பதற்றத்தோடும், நிச்சயமற்ற எண்ணத்தோடும் இருக்கும் மக்களில் பலர் எதிர்நோக்கோடு இருப்பது அவசியம். இந்த ஆண்டு தீபகற்ப மலேசிய திருஅவை எதிர்நோக்குக் கொண்ட சீடர்களாக, - நம்பிக்கைக் கொள்ள, வாழ, பிறருக்கு எதிர்நோக்கைத் தர நம்மை அழைக்கின்றது. இந்த அழைப்புக்கு நாம் அன்போடும், துணிவோடும், ஆர்வத்தோடும், மறுமொழி கொடுப்போமா?

ஆண்டவரே, என் வாழ்வில் உம் வல்லமையின் செயல்களை நான் காண்பேனாக! ✣



*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

10 ஜனவரி 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

ஆண்டவரின் திருமுழுக்கு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: **வாக்கு மனிதர் ஆனார்**



# எதிர்நோக்கின் சீடர்களாக மாறுதல்

இன்றைய முதல் வாசகம் எசாயா புத்தகத்தில் ஊழியனின் பாடல்கள் என்றப் பகுதியை நாம் வாசிக்கின்றோம். பொதுவாக, இந்தப் பகுதியில் உலகெங்கிலும் உள்ள நாடுகளிலிருந்து இஸ்ராயேல் நாட்டைக் கடவுள் தேர்ந்தெடுத்து மீட்டதால், கடவுள் அதற்கு அனைத்து நலன்களையும் வழங்குகிறார் என்பதைக் காண்கிறோம். இன்னும் குறிப்பாகக் கூறவேண்டுமென்றால், 'ஊழியனின் பாடல்கள்'ஒரு தனி மனிதனையும், அவனுடைய பணிகளைப் பற்றியும் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் இறைவார்த்தைகளையும் நாம் காணலாம். ஆண்டவரின் ஆவி அவர்மேல் இருக்கும், அவர் அனைத்து நாடுகளுக்கும் நீதியைக் கொண்டுவருவார், அதுவும், வன்முறையற்ற, ஆக்கிரமிப்பு இல்லாத வகையில் அதைக் கொணருவார். பார்வையற்றோர் பார்வை பெறவும், அடிமைத் தளையில் இருப்போர் விடுதலை பெறவும் அவர் அனுப்பப்பட்டுள்ளார்.